# கருத்துத்தாள் இடையிலிங்கம்

### இடையிலிங்கம் என்றால் என்ன?

இடையிலிங்கர் ஆண் மற்றும் பெண் என்ற இருமை கருத்தியல்களுக்குள் அடங்கா பாலின கூறுகளுடன் ( பிறப்பு உறுப்புகள், இனப்பெருக்க உட்சுரப்பிகள், நிறப்புரி வகைகள் –குரோமோசோம் வகைகள்) பிறக்கின்றனர்.

இடையிலிங்கம் என்பது பல்வேறு வகை இயற்கையான உடலியல் மாறுபாடுகளை குறிக்கும் ஒரு பொதுச்சொல். இடையிலிங்க கூறுகள் பிறப்பிலயே காணப்படலாம் இல்லை பருவம் எய்திய பின்னர் கூட வெளிப்படலாம். சில இனக்கீற்று/நிறப்புரி(குரோமோசோம்) சார்ந்த இடையிலிங்க கூறுகள் உடலில் வெளிப்படுவதே இல்லை.

ஆய்வாளர்களின் கருத்துப்படி மொத்த மக்கள் தொகையில் 0.05 முதல் 1.7 சதவீதத்தினர் இடையிலிங்க கூறுகளுடன் பிறக்கின்றனர். ( செந்நிறமான தலைமுடியுடன் பிறப்பவர்கள் கூட உலகில் 1.7 சதவீதத்தினர் என்று கணிக்கப்பட்டுள்ளது).

இடையிலிங்கர் அடையாளம் என்பது உடல் சார்ந்த கூறுகளை மட்டுமே குறிக்கும். ஒரு நபரின் பாலின அடையாளத்தையோ பாலின ஈர்ப்பு அடையாளத்தையோ குறிக்காது. ஒரு இடையிலிங்க நபர் பிற ஆணிடமோ பெண்ணிடமோ இல்லை இருவரிடமோ அல்லது பாலீர்ப்பிலியாகவோ  (யாரிடமும் ஈர்ப்பு ஏற்ப்படாத நிலை ) அடையாளப்படலாம். அதே நேரத்தில் ஒரு இடையிலிங்கதவர் தம்மை  ஆணாகவோ/ பெண்ணாகவோ/இரண்டுமாகவோ/இரண்டுமற்ற நிலையாகவோ கருதி அடையாளப்படுத்தலாம்.

ஆண் மற்றும் பெண்ணிடமிருந்து வேறுபட்ட பாலின உறுப்புகள் கொண்டுள்ளதால் பாகுபாட்டிக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் ஆளாக்கப்படுகின்றனர். மருத்துவ வசதிகள் மறுக்கப்படுகின்றது; தங்கள் சொந்த உடலியல் சார்ந்த இறையாண்மை பறிக்கப்படுகின்றது; சித்திரவதையும் அன்பின்றி நடத்தப்படும் நிலைக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்; சமத்துவமாகவும் பாகுபாடின்றியும் நடத்தப்படுகின்றனர்.

### உடலியல் இறையாண்மை

இடையிலிங்க பச்சிளம் குழந்தைகள் மாறுபட்ட பாலின உறுப்புகளுடன் பிறக்கின்றனர். அவர்களின் மாறுபட்ட உறுப்புகளை அறுவைசிகிச்சை மூலம் அகற்றி அவர்களின் உடலை ஆண் போன்றோ இல்லை பெண் போன்றோ மாற்றுவதற்கான முயற்சிகள் சாதாரணமாக அரங்கேறி வருகின்றது.

இத்தகுத் தவறானச் சிகிச்சைகளால் ஏற்படும் பாதிப்புகள் என்ன? மாற்ற இயலா மலட்டுத்தன்மை, சிறுநீர் அடங்காமை, தாங்க இயலா உடல் வேதனை, பால் உணர்வு அற்றுப்போதல் மற்றும் மனச்சோர்வு போன்ற வாழ்நாள் முழுதும் நீடிக்கும் மன வேதனை சார்ந்த பிரச்சனைகள். இடையிலிங்கர் குழந்தையாக இருக்கும் போதே அவர்கள் மீது இத்தகு அறுவைசிகிச்சைகளை திணிக்கபடுவது என்பது அவர்களின். உடலியல் இறையாண்மைக்கு எதிரானதும், கண்ணியமாக அன்போடு நடத்தப்பட வேண்டிய உரிமைகளுக்கும், தவறான சிகிச்சைகளிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டிய உரிமைகளுக்கும் முற்றிலும் எதிரானது என்பது குறிப்பிடத்தக்கது.

கலாச்சாரம் சார்ந்த பாலினம் குறித்தத் தவறானக் கருத்துக்கள் அடிப்படையில் இடையிலிங்கர் பாகுபடுத்தப்படுவதும் அவர்கள் சரியற்ற சிகிச்சை முறைகளுக்கு உட்படுத்தப்படுவதும் நியாயப்படுத்தப்படுகிறது.

பாகுபாடு பாராட்டும் மனநிலைகள் மனித உரிமை மீறல்களை நியாயப்படுத்தும் போக்கானது

சரியற்றது. அரசானது இத்தகு பாகுபாடு பாராட்டும் மனநிலைகளை தடுக்க வேண்டுமே ஒழிய அதை நியாயப்படுத்தக் கூடாது. சில நேரங்களில் இத்தகுத் தவறான சிகிச்சை முறைகள் சில மருத்துவ ரீதியான காரணங்களைச் சுட்டிக்காட்டி நியாயப்படுத்தப்படுவதுண்டு. ஆனால் இவற்றை நியாயப்படுத்த போதுமான தகுந்த ஆதாரங்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவர்கள் ஆரோக்கியமான, மனிதனின் உடலியல் இறையாண்மைக்கு தகுந்த  மாற்று வழிகளைப்பற்றி சிந்திப்பதுமில்லை.

இத்தகு தவறான கருத்தியல்கள் மருத்துவர்கள் மற்றும்  இடையிலிங்கரின் பெற்றோரிடையே காணப்படுவதும், மனித உரிமைகளை மீறும் இத்தகு சிகிச்சை முறைகளை இவர்களே கட்டிக்காப்பதும், அவற்றிற்கு அனுமதி வழங்குவதும் வருந்துதற்குரியது. இத்தகு தவறான மருத்துவ முறைகளால் ஏற்படும் குறுகிய கால & நீண்ட கால பாதிப்புகள் குறித்து போதிய விழிப்புணர்வின்மையும், பிற இடையிலிங்கர் மற்றும் அவர்களின் குடும்பத்தினரோடு அனுபவப்பகிர்வின்மையும் , இத்தகு தவறான சிகிச்சை முறைகளுக்கு இவர்கள் அனுமதி வழங்குவதிற்கு காரணமாக அமைகின்றது.

குழந்தைப்பருவத்தில் இத்தகு அறுவைசிகிச்சைக்கு உட்படுத்தபட்ட இடையிலிங்கர் பலர் இதனால் ஏற்பட்ட வேதனை தரும் வடுக்கள், உடல் மற்றும் மனம் சார்ந்த துன்பங்கள், இடையிலிங்க அடையாளங்களை மறைப்பதால் எழும் அவமானம் மற்றும் களங்கங்கள் ஆகியவற்றை வேதனையோடு சுமக்கின்றனர். தங்களுக்குப் பொருந்தாத பாலின அடையாளத்தை இந்த அறுவை சிகிச்சை வழங்குவதாக பல இடையிலிங்கர் கருதுகின்றனர்.

உடலின் இறையாண்மையில் மாற்ற இயலா தழும்புகளை உருவாக்கும் இந்த தேவையற்ற& விரும்பத்தகாத மருத்துவ சிகிச்சை முறைகள் தடைசெய்யப்படவேண்டும். இடையிலிங்கரும் அவர்கள் குடும்பங்களும் போதுமான ஆலோசனை மற்றும் உதவிக்கும், சக-ஆதரவுக்கும் உரியவராக்கப்பட வேண்டும்.

## பாகுபாடு

இடையிலிங்கர் தங்கள் சுய அடையாளத்தை மறைத்து வாழும் நிலை உள்ளது. அது வெளிப்படும் சூழல்களில் சமூகத்தால் பாகுபாட்டிற்கும் தவறான முறையில் பயன்படுத்துவதற்கும் ஆளாக்கப்படுகின்றனர். பாகுபாட்டிற்கு எதிரான சட்டங்கள் இடையிலிங்கருக்கு எதிரான பாகுபாட்டினை தடை செய்வதில்லை.  இதனால் மருத்துவம், கல்வி, பொதுச்சேவைகள், வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டு முதலிய துறைகளில் இடையிலிங்கர் பாகுபாட்டிற்கு உள்ளாவது தொடர்ந்து வருகின்றது.

இடையிலிங்கருக்கு தகுந்த மருத்துவ சேவை வழங்க வேண்டிய மருத்துவ சேவை வழங்குநர்களே இடையிலிங்கர் குறித்த போதுமான அறிவோ பயிற்சியோ புரிதலோ இல்லாதிருப்பதால் உடலின் இறையாண்மை –ஆரோக்கியம் –சுதந்திரம் ஆகியவற்றை கணக்கில் எடுத்துக்கொண்டு சிகிச்சை வழங்கப்படுவது இல்லை.

பிறப்புச்சான்றிதழ்கள் & அரசு ஆவணங்களில் பாலின மாற்றம் செய்யும் முயற்சிகளில் ஈடுபடும் போது பல இடையிலிங்கர் தடைகளுக்கும் பாகுபாடுகளுக்கும் ஆளாக்கப்படுகின்றனர். இடையிலிங்க விளையாட்டு வீரர்கள் பல்வேறு தடைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இடையிலிங்கர் என்ற காரணத்தால் பல விளையாட்டு வீரர்கள் தகுதி இழப்புக்கு உள்ளாகின்றனர். உடலியல் காரணிகளான உயரம் மற்றும் தசை வளர்ச்சி ஆகியவையே விளையாட்டுச் செயல்திறனை பெரிதும் பாதிக்கின்றது. ஒருவர் இடையிலிங்கரா இல்லையா என்பதல்ல. ஆனால் உயரம் மற்றும் தசை வளர்ச்சி ஆகியவை பெரிதாக கண்டுகொள்ளப்படுவதில்லை. இடையிலிங்க நிலையே தடைக்கும் தகுதி இழப்புக்கும் காரணியாக எடுத்துக்கொள்ளக்கபடுகிறது.

### பாதுகாப்பு மற்றும் தீர்வு

இடையிலிங்கர் உரிமை மீறல்களினின்று பாதுகாக்கப்படவேண்டும். உரிமைகள் மீறப்படும் போது அவை தகுந்த விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்.குறைநிவர்த்தி மற்றும் தக்க இழப்பீடிற்கு பாதிக்கப்பட்டவர்கள் அணுகுவதற்குரிய வசதிகள் வேண்டும்.

தம்சார்ந்த சட்டங்கள் மற்றும் கொள்கைகள் வரையறுக்கப்படும் போது இடையிலிங்கர் கலந்தாலோசிக்கப்படவேண்டும்.

### ஆக்கப்பூர்வமான முன்னேற்றங்கள்

2013-ல் ஆத்திரேலியா பால் பாகுபாடு சட்டத்திருத்தத்தை (பாலின ஈர்ப்பு அடையாளம், பாலின அடையாளம் மற்றும் இடையிலிங்கர் நிலை) அமல்படுத்தியது. முதல் முதலாக இடையிலிங்கருக்கு எதிரான பாகுபாட்டினை தடை செய்து எழுந்த சட்டம் இதுவாகும். மேலும் ஆத்திரேலிய சட்டசபையானது சுய-விருப்பமற்ற மற்றும் கட்டாய கருத்தடைக்கு உள்ளாக்கப்படும் இடையிலிங்கர் குறித்த அதிகாரப்பூர்வமான விசாரணைக்கும் உத்தரவிட்டது.

2015-ல் மால்ட்டாவானது பாலின அடையாளம், பாலின வெளிப்பாடு மற்றும் பால்-பண்புகள் சட்டத்தை ஏற்றுகொண்டது. தகுந்த விருப்பமின்றி இடையிலிங்கச் சிறார் (மைனர்) அறுவை சிகிச்சைக்கும் மருத்துவ சிகிச்சைக்கும் உள்ளாக்கப்படுவதை முதல் முதலாக தடை செய்யும் சட்டமும் இதுவே. பால்-பண்புகள் அடிப்படையில் ஒருவரை பாகுபடுத்துவதையும் இந்தச் சட்டம் தடை செய்கிறது.

22 ஏப்ரல் 2019-ல் சென்னை உயர் நீதி மன்றமானது (மதுரை கிளை ) வரலாற்று மகத்துவமான தீர்ப்பாக இடையிலிங்க குழந்தைகளின் பாலினத்தை அறுவை சிகிச்சை மூலம் மாற்றும் மருத்துவ முறையினை தடை செய்தது. இத்தீர்ப்பானது இடையிலிங்கரின் உரிமைகளுக்காக உழைக்கும் கோபி ஷங்கர் மதுரையின் அளப்பரிய முயற்சிகளை சுட்டிக்காட்டியது. ஆகஸ்டு13 2019-ல் தமிழக அரசும் இத்தகு அறுவை சிகிச்சை முறைகளை மேற்கொள்வதை தடை செய்து அரசாணை பிறப்பித்தது.

### செயல்பாட்டுக்கான கூறுகள்

**அரசுகள்:**

• இடையிலிங்க குழந்தைகள் மீது திணிக்கப்படும் தேவயற்ற மருத்துவ அறுவைசிகிச்சைகள் மற்றும் நடைமுறைகளை தடை செய்து அவர்களின் உடலின் இறையாண்மையையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பது.

• இடையிலிங்கரும் அவர்களின் குடும்பங்களும் தகுந்த ஆலோசனையும் உதவியும் சக ஆதரவும் கிடைப்பதை உறுதி செய்தல்.

• இடையிலிங்கருக்கு எதிரானப் பாகுபாட்டினை கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, விளையாட்டு மற்றும் பொதுச்சேவைகள் ஆகியவற்றில் பாகுபாட்டிற்கு எதிரான முயற்சிகளால் தடை செய்தல்.

• இடையிலிங்கருக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டு தவறிழைத்தவர்கள் தகுந்த தண்டனை பெறச்செய்தல்.குறைநிவர்த்தி மற்றும் இழப்பீடிற்கு பாதிக்கப்பட்டவர்கள் அணுகுவதை ஆவன செய்தல்.

• தேசிய மனித உரிமை அமைப்புகள் இடையிலிங்கரின் மனித உரிமை நிலை குறித்து ஆராய்ச்சியும் கண்காணிப்பும் மேற்கொள்ளல்.

• பிறப்புச்சான்றிதழ்கள் மற்றும் அரசு ஆவணங்களில் பாலினக்குறிப்பான்களை மாற்றம் செய்யும் முறைகள் எளிதாக்கப்படவேண்டும்.

• இடையிலிங்க மக்கள் சார்ந்த தகுந்த ஆரோக்கிய தேவைகள் மற்றும் மனித உரிமைகள் குறித்து மருத்துவ சேவை வழங்குநர்களுக்கு பயிற்சி வழங்குதல். இடையிலிங்கரின் சுதந்திரம், இறையாண்மை மற்றும் பால்-குணங்கள் ஆகியவற்றை மதிக்கும் விதமாக தகுந்த ஆலோசனை மற்றும் பராமரிப்பினை இடையிலிங்கர் & அவர்தம் பெற்றோருக்கு வழங்குதல்.

• இடையிலிங்கர் நீதித்துறை, குடிவரவு, சட்ட அமலாக்கம், சுகாதாரம், கல்வி மற்றும் பிற அமைப்புகள் சார்ந்த அதிகாரிகளால் தகுந்த மதிப்புடன் சரிசமமான நடத்தப்படுவதை உறுதி செய்தல்.

• தம்சார்ந்த ஆராய்ச்சிகள்/பரிசோதனைகள், சட்டங்கள் மற்றும் கொள்கைகள் வரையறுக்கப்படும் போது இடையிலிங்கர் மற்றும் இடையிலிங்கர் சார்ந்த அமைப்புகள் கலந்தாலோசிக்கப்படுவதையும் பங்குபெறுவதையும் உறுதி செய்தல்.

**ஊடகங்கள்:**

• இடையிலிங்கர் மற்றும் அவர்கள் குழுக்களின் குரலை செய்தித்தாள், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளில் பதிவு செய்தல்.

• இடையிலிங்கர் மற்றும் அவர்களின் மனித உரிமைகள் குறித்து சுயச்சார்பற்ற மற்றும் சமத்துவக் கண்ணோட்டத்துடன் கூடிய உருவத்தை அளித்தல்.

• இடையிலிங்கரின் பாலின ஈர்ப்பு அடையாளம் மற்றும் பாலின அடையாளம் குறித்து ஊகங்கள் அடிப்படையில் கருத்துப்பதிவு செய்வதை முற்றிலும் தவிர்த்தல்.

**நீங்கள், உங்கள் நண்பர்கள் மற்றும் பிறரும் கூட மாற்றங்களை உருவாக்கலாம்:**

• இடையிலிங்கருக்கு எதிராக வன்முறையோ பாகுபாடோ எழும் போது அதற்கு எதிராக உங்கள் குரலெழுப்பலாம்.

• இடையிலிங்கர் பல்வேறு வகையான பாலின ஈர்ப்பு அடையாளத்தயோ பாலின அடையாளத்தயோ கொண்டிருப்பர் என்பதை நினைவில் நிறுத்தல்.

**ஐக்கிய நாடுகள் கருத்துத்தாள் ஒப்புகை (தமிழ் மொழியில்):**
ஆசிய மொழிகளில் ஐக்கிய நாடுகள் கருத்துத்தாள் மொழிபெயர்ப்புத் திட்டமானது இடையிலிங்கர் ஆசியாவால் தொடங்கப்பட்டு ஆர்.எப்.எஸ்.எல்-ஆல் நிதியுதவி வழங்கப்பட்டது. இடையிலிங்கர் ஆசியா கோபி ஷங்கர் மதுரை மற்றும் ஜாண் மார்ஷல் ஜே.எம் ஆகியோரின் உள்ளீடுகள், திருத்தங்கள் மற்றும் மொழிபெயர்ப்பு ஆதரவுக்கு நன்றி கூறுகின்றது.

ஐக்கிய நாடுகள் சுதந்திரமான&சரிசமமான பிரச்சாரம் மற்றும் ஒ.ஹச்.சீ.ஹச்.ஆர் –இன் அனுமதிக்கும் நன்றி. இது ஆங்கிலத்தில் உள்ள அசலான ஆவணத்தின் அதிகாரப்பூர்வமற்ற மொழிபெயர்ப்பு ஆகும். இது தேசிய இடையிலிங்க ஆர்வலர்களால் சரிபார்த்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் இந்த அதிகாரப்பூர்வமற்ற மொழிபெயர்ப்பின் துல்லியத்தன்மைக்கு பொறுப்பேற்காது.

Produced by: intersex Asia

Source: UNITED NATIONS HUMAN RIGHTS OFFICE OF THE HIGH COMMISSIONER; FREE & EQUAL UNITED NATIONS

Our Sponsors: RFSL; Astraea Lesbian Foundation for Justice; mama cash

Allies: OII-Chinese